ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 42/21 — 1973 ජනවාරි 15 වැනි සඳුද — 1973.01.15
42/21 ம் இலக்கம்—1973 ம் ஆண்டு சனவரி மாதம் 15 ந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (I) — பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. அ. எண் : டபிள்யூ. 68(22)/73.

(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்

பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ், முதலமைச்சரின் விதப்புரையின்மேல், சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி.

வி. கொபல்லவ,
சனாதிபதி.

கொழும்பு,
சனவரி 15, 1973.

### ஒழுங்குவிதி

1. (1) ஏதேனும் சட்டத்தின் எது எவ்விதமிருந்தபோதும், பகிரங்க நிறுவனமொன்றுக்குச் சொந்தமான ஆதனமெதுவும் தொடர்பாகப் புரியப்பட்ட தண்டனைச்சட்டக் கோவையின் 367 ஆம் பிரிவு, 370 ஆம் பிரிவு, 386 ஆம் பிரிவு, 389 ஆம் பிரிவு, 391 ஆம் பிரிவு, அல்லது 394 ஆம் பிரிவின்கீழான தவறென்று தொடர்பில் ஐயுறப்பட்ட அல்லது குற்றஞ்சாட்டப்பட்ட அல்லது பாதுகாப்பில் வைக்கப்பட்ட ஆளெவரையும் எந் நீதிமன்றமும் சட்டத்துறைத் தலைமையதிபதியின் எழுத்திலான சம்மதமின்றிப் பிணையில் விடும்படி கட்டளை இடுதலாகாது.

(2) இவ்வொழுங்குவிதியில், "பகிரங்க நிறுவனம்" என்பது—

(அ) கூட்டுறவுச் சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கமொன்று ;

(ஆ) வங்கியொன்று ;

(இ) அரசாங்கத் திணைக்களமொன்று ;

(ஈ) அதன் மூலதனம் முழுமையாகவோ பாகமாகவோ அரசாங்கத்தினால் உதவப்படும் கூட்டுத்தாபன மேதேனும்,

எனப் பொருள்படுவதுடன் இவற்றையும் உள்ளடக்கும்.

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.